*ஆய்வுக்கட்டுரை இல: 12*

# திருக்குறள் - திருக்குர்ஆன் வகுத்துள்ள அறநீதிக்கோட்பாடுகள் சமூகவரலாற்று நோக்கில் ஒப்பியல் ஆய்வு

**க.அருந்தவராஜா[1], மங்களரூபிசிவகுமார்[2]**
[1&2]வரலாற்றுத்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
*arunn.msu@gmail.com*

***ஆய்வுச்சுருக்கம்***

*துனி மனிதனுடைய உரிமைகளும் கடமைகளும் சமூகப் பிணைப்புக்களும் பழக்கவழக்கங்களும், விருப்பு வெறுப்புக்களும் அனைத்தும் பொதுவாக நீதி மற்றும் அறக்கோட்பாடுகளினால் கட்டுப்படுத்தப்பட்டுள்ளன. ''நீதி'' என்பது தமிழ் மொழிக்கு சொந்தமானதொரு சொல் அல்ல. அது வடமொழிக்குச் சொந்தமானதொரு சொல்லாகக் கருதப்படுகின்றது. ஆரம்பத்தில் இச்சொல்லானது வடமொழியில் நடாத்துதல், இயக்குதல் போன்ற அர்த்தத்தில் கையாளப்பட்டிருக்கவேண்டும். பின்னர் நாளடைவில் கருத்து வளர்ச்சிக்கேற்றவகையில் அதனது பொருள் விரிவடைந்தும் மாற்றமடைந்தும் வந்துள்ளது. அவ்வாறே ''அறம்'' என்ற சொல்லுக்கு விடைகாணுவதென்பதும் மிகவும் கடினம். பொருளிலும் இச்சொல்லானது நெகிழ்ச்சி கொண்டதாக உள்ளது. ஒரு குறிக்கப்பட்ட சமயத்தவர்களுக்கோ அல்லது சமுதாயத்தவருக்கோ மொழியினருக்கோ மட்டுமன்றி உலகப் பொதுமறையாக வைத்துப் பேசப்படுவை திருக்குர்ஆனும் திருக்குறளுமே. எனவே உலகப் பொதுமறை என்ற சொல்லே இவை இரண்டுக்கும் இடையிலான கருத்தொற்றுமையினைப் பிரதிபலிக்கின்றன. மனிதமேம்பாட்டின் பொருட்டு அவர்கள் கையாளவேண்டிய வழிமுறைகள் பற்றித் திருக்குர்ஆன் வழிவாழ்க்கை நெறிகளை வகுத்துக் கூறுவதற்கு இவ்வுலகில் நபிகள் அவதரித்தார். இஸ்லாம் என்றாலே சமாதானம், கட்டுப்பாடு என்று பொருள்படும். இறைவன் அருளிய திருமறையாம் திருக்குர்ஆனின் கண்ணியம் பொருந்திய மொழிகளையும் வையகத்தினை உயிர்ப்பிக்கவந்த முகமது நபி அவர்களது போதனைகளையும் வாழ்க்கை முறைகளையும் தெளிவான நேரியவழியில் பின்பற்றுதலே இஸ்லாமியக் கொள்கையாகும். இஸ்லாமியப் பண்பாடானது முழு மனிதவர்க்கத்தின் ஒட்டுமொத்தமான வளர்ச்சியினைக் குறிக்கின்றது. அவ்வாறே திருக்குறள் தருகின்ற கருத்துக்கள் மக்களது வாழ்க்கைக்கு வழிகாட்டியாக உள்ளன. தாம் வாழ்ந்த காலகட்டத்தினை கொண்டு திருவள்ளுவரினால் முழுமைப்படுத்தப்பட்ட அறநூலாக இது அமைந்துள்ளது. எல்லாஉயிர்களுக்கும் பிறப்பு ஒர்வகைத்தன்மை. அத்தகையபிறப்பில் ஏற்றத்தாழ்வு காணாத சமநிலைப் பார்வையினை உடையது, திருவள்ளுவர் மானுடம் போற்றும் ஒப்பற்ற உலகப் பொதுமறையில் காலத்திற்கேற்ப மாறாத, மாற்றமுடியாத அழியாத பண்பாட்டினைப் பதிவு ஏற்றியுள்ளார். எனவே'யாதும் ஊரேயாவரும் கேளீர்' என்ற பூங்குன்றனாருடைய பாடல் வரிகளுக்கு ஏற்றவகையில் உலகமக்கள் எல்லோரும் ஏற்றுக்கொள்ளுகின்ற வகையில் திருக்குர்ஆனிலும் அறநூலான திருக்குறளிலும் பல ஒப்புமைக் கருத்துக்கள் காணப்படுகின்றன. அவ்வகையில் திருக்குர்ஆனுடைய பெருமைகளை நபிகள் வாயிலாகவும் திருக்குறளின் பெருமையினை வள்ளுவரது வாயிலாகவும் அறிந்துகொள்ளமுடிகின்றது. பெருமளவிற்குஒப்பியல் ஆய்வாக அமைகின்ற இவ்வாய்வானது சமூக, வரலற்றினடிப்படையில் ஆராயப்படுகின்றது. இரண்டினதும் பொதுவான தன்மைகளை எடுத்துக்காட்டுவதும் இவை இரண்டினையும் ஒப்பிட்டு அவற்றில் காணப்படுகின்ற ஓரியல்பான நீதிமற்றும் அறக்கருத்துக்களை வெளிக்கொண்டுவருவதும் இவ்விடயமாக ஆராயவிரும்புகின்ற ஆய்வாளர்களுக்கான வழிகாட்டியாகவும் அமையவேண்டுமென்ற நோக்கங்களை இவ்வாய்வு கொண்டுள்ளது. திருக்குறள், திருக்குர்ஆன் ஆகியவை இரண்டும் பிரதான முதற்தரஆதாரங்களாகவும் பின்னாளில் இவற்றினை அடிப்படையாகவைத்து எழுந்த சில நூல்கள், கட்டுரைகள் போன்றனவும் இரண்டாந்தர ஆதாரங்களாகவும் ஆய்வில் பயன்படுத்தப்பட்டுள்ளன. பொதுப்படப் பார்த்தால் இவை இரண்டுமே மக்களது வாழ்வினை மேம்படுத்தத் தோன்றியவை. தாம் தோன்றிய*

*நோக்கங்களையும் வெற்றிகரமான வகையில் நிறைக்கொண்டதுடன் நிறைவேற்றியும் வருகின்றன.*

***பிரதானசொற்பதங்கள்:*** *அறநெறிகருத்துக்கள்,உலகப்பொதுமறைகள்,அன்புடமை,இல்வாழ்க்கை,இன்சொல் கூறுதல்*

**அறிமுகம்**

உலகிலே காணப்படுகின்ற மொழிகள் பலவற்றுக்கு இல்லாத சிறப்பானது செம்மொழியான தமிழ் மொழிக்கு உண்டெனபதனை எவரும் மறுப்பதற்கு இல்லை. இத்தகைய செந்தமிழ் மொழிக்குப் பெருமையினைத் தேடிக் கொடுத்த நூல்களுள் திருக்குறளுக்கும் குறிப்பிடத்தக்க இடமுண்டெமன்பதனை ஏற்றுக்கொள்ளவேண்டும். இதனைப் படைத்த திருவள்ளுவர் மானுடம் போற்றுகின்ற ஒப்பற்ற உலகப் பொதுமறையில் காலத்திற்கு ஏற்ப மாறாத, மாற்றிக்கொள்ளாத, அழியாத பண்பாட்டினைப் பதிவு செய்துள்ளார். இலக்கியம் கண்டதற்கு இலக்கணம் வகுத்ததனைப் போன்று வாழ்வியலுக்கு இலக்கணத்தினை வகுத்தவர் திருவள்ளுவர். (கலாதேவி, ச.,2011) திருக்குறள் தருகின்ற கருத்துக்கள் மக்களது வாழ்க்கைக்கு வழிகாட்டியாக உள்ளன. தாம் வாழ்ந்த காலகட்டத்தினைக் கொண்டு திருவள்ளுவரினால் முழுமைப்படுத்தப்பட்ட அறநூலாக இது அமைந்துள்ளது. அவ்வாறே மனிதமேம்பாட்டின் பொருட்டு அவர்கள் கையாளவேண்டிய வழிமுறைகள் பற்றித் திருக்குர்ஆன் வழிவாழ்க்கை நெறிகளை வகுத்துக் கூறுவதற்கு இவ்வுலகில் நபிகள் அவதரித்தார். இஸ்லாம் என்றாலே சமாதானம், கட்டுப்பாடு என்று பொருள்படும். இறைவன் அருளிய திருமுறையாம் திருக்குர்ஆனின் கண்ணியம் பொருந்திய மொழிகளையும் வையகத்தினை உயிர்ப்பிக்க வந்த முகமதுநபி அவர்களது போதனைகளையும் வாழ்க்கை முறைகளையும் தெளிவான நேரிய வழியில் பின்பற்றுதலே இஸ்லாமியக் கொள்கையாகும். இஸ்லாமியப் பண்பாடானது முழு மனித வர்க்கத்தின் ஒட்டுமொத்தமான வளர்ச்சியினைக் குறிக்கின்றது. எனவே “யாதும் ஊரே யாவரும் கேளீர்“ என்ற பூங்குன்றனாருடைய பாடல் வரிகளுக்கு ஏற்ற வகையில் உலகமக்கள் எல்லோரும் ஏற்றுக்கொள்ளுகின்ற வகையில் அறநூலான திருக்குறளிலும், திருக்குர்ஆனிலும் பல ஒப்புமைக் கருத்துக்கள் காணப்படுகின்றன. அவற்றில் அற நீதிக் கோட்பாடுகள் தொடர்பான கருத்துக்கள் முக்கியத்துவம் வாய்ந்தன.

**அறம்**

அறம் தொடர்பாகக் கூறுகின்ற தமிழ் நூல்கள் அதிகளவில் காணப்பட்டாலும்கூட அறம் என்றால் என்ன? என்பதற்கான விடையினைக் காணுவதென்பது கடினமான செயலாகவே உள்ளது. அறம் என்ற சொல்லானது பொருளில் நெகிழ்ச்சியினை உடையது. அதனைப் பகுத்துப் பொருள் காண்பதென்பது எளிதன்று. இருப்பினும் மனிதன் தனக்கென வரையறுத்துக்கொண்ட ஒழுக்க முறைகளின் தொகுதியினைப் பொதுவாக அறம் என்பர். பிறவி தோறும் மனிதனைப் பற்றிக் கொண்டு வருகின்ற தீவினையின் பயனாகிய அறியாமையினை அறுத்தெறிவதே அறம் என்று ஆன்மீக வண்ணங்குழைத்த விளக்கமும் கொடுக்கப்படுகின்றது.(முருகன், இராசு, ச.,2011) பண்டைய தமிழ் மக்கள் தனிமனிதனையும்

சமுதாயத்தினையும் போற்றி வளர்க்கின்ற ஒழுக்க நெறியாக இதனைக் கருதினர். மறுமைப் பேற்றினை அளித்தாலும் அளிக்காதுவிட்டாலும், இவ்வுலக வாழ்க்கையில் தனிமனிதனும் சமுதாயமும் நலமாக வாழ்வதற்கும், முன்னேற்றத்தினை அடைவதற்கும் அறவாழ்வு இன்றியமையாததென்ற நம்பிக்கை நமது முன்னோர்களிடம் நீண்டகாலமாக இருந்து வந்துள்ளது.

அறம் என்னும் சொல்லிற்குத் தமிழில் எட்டு வகையான பொருள்கள் வழக்கிலிருந்து வருகின்றன. பொதுவாக அது நற்பண்பு அல்லது ஒழுக்கம் எனும் பொருளிலேயே பெரும்பாலும் தமிழ் இலக்கியங்களில் வழங்கப்பட்டிருப்பதனை நாம் காணலாம். பொதுவாக அது நற்பண்பு அல்லது ஒழுக்கம் எனும் பொருளிலேயே பெரும்பாலும் தமிழ் இலக்கியங்களில் வழங்கப்பெற்றிருப்பதனை நாம் அவதானிக்கலாம். அறம் உணர்த்துகின்ற இப்பொருள் அறிவியல் சொற் பொருள் வகையினைச் சேர்ந்ததாகும். இப்பொருளில் மட்டுமல்லாது வழக்கம். நீதி, கடமை, புண்ணியம், ஈகை, அறக்கடவுள், சமயம் என்ற பல்வேறு பொருள்களிலும் அறம் என்ற சொல்லானது வழங்கப்பட்டு வருகின்றது.

**நீதி**

மனிதன் ஒவ்வொருவரதும் கடமைகளும் உரிமைகளும் சமூகப்பிணைப்பும், குடும்ப இணைப்பும், பழக்க வழக்கங்களும், விருப்பு வெறுப்பு போன்ற பண்புகள் எல்லாம் அறத்தினது கோட்பாடுகளினால் கட்டுப்படுத்தப்பட்டுள்ளன. உண்மையில் நீதி என்பது தமிழ்ச் சொல் அல்ல. அது வடமொழிக்கான சொல்லாகவே பார்க்கப்படுகின்றது. அதுமட்டுமன்றி இது “நீ“ என்ற வினைச் சொல்லினது அடியாகத் தோன்றியது. “நீ“ என்ற இச்சொல்லுக்கு வடமொழியில் செல்(டுநய)இ கொண்டு செல் (ஊழஎெநல), நடத்து (ஊழனரஉவ),வழிகாட்டு (புரனை)இ ஆட்சி செய் (புழஎநசஅ), இயக்கு (னுசைநஉவ) போன்ற பொருள்கள் காணப்படுகின்றன. இச்சொல்லடியாகவே இயக்குதல், வழிகாட்டுதல், செயலாட்சி, நடத்தை, தகுதி, மரபொழுங்கு என்ற பல பொருள்களை உணர்த்தவதாக உள்ளது. அத்துடன் செயலின் நிகழ்நிலை கொள்கை முறை, முன்னுணர்மதி, அரசியல் அறிவுத்திறன், அரசியல் இராஜதந்திரத்திறன் போன்ற பல பொருள்களிலும் இச்சொல் வருகின்றது. (முருகன், இராசு, ச.,2011) எனவே ஆரம்பத்தில் வடமொழியில் முதன் முதலாக நடத்துதல், செலுத்துதல், இயக்குதல் போன்ற கருத்தில் இவை பயன்பட்டுப் பின்னர் ஏற்பட்ட கருத்து வளர்ச்சிக்கேற்ற வகையில் இச்சொல்லின் பொருளானது கால தேவைக்கேற்ற வகையில் பரந்தும் விரிந்தும் வளர்ந்திருக்க வேண்டுமென எண்ணத் தூண்டுகின்றது. அவ்வாறு வளர்ந்த காலத்தில் “நீதி“ என்பது சிறப்பாக இராஜநீதியினைக் குறிக்கின்ற சொல்லாகக் கருதப்படலாயிற்று எனலாம்.

உண்மையில் “நீதி“ என்ற சொல்லானது பழந்த தமிழ் இலக்கியங்களில் பயன்படுத்தப்பட்டதாகத் தெரியவில்லை. இதனால் திருக்குறளிலும்கூட “நீதி“ என்ற சொல் காணப்படவில்லை. அதேநேரத்தில் அதன் பொருளை உணர்த்துவதற்கு நயன் என்ற

சொல்லினைப் பயன்படுத்தியதாக பரிமேலழகர் கருதுகின்றார். பழைய தமிழ் இலக்கியத்தில் நன்று, நன்றி, நன்மை, நல்லது என்ற சொற்கள் அறம் என்ற பொருளில் பல இடங்களில் பயன்படுத்தப்பட்டுள்ளன. அவற்றினைப் போன்று நயம் என்ற சொல்லானது "நீதி" என்ற பொருளில் வழங்கப்பட்டிருக்க வேண்டுமென்பது பரிமேலழகரின் கருத்தாகும். அதற்கு நீதி என்று அவர் பொருள் கூறினாலும், அறம் என்ற பொருளையே அதனால் காட்டுகின்றார்.

" நயன் இன்ற நன்றி பயக்கும் பயன்ஈன்று
பண்பின் தலைப்பிரயாச் சொல்" (குறள் : 97)

இக்குறட் பாவினை ஒருவனுக்கு இம்மைக்கு நீதியினையும் உண்டாக்கி மறுமைக்கு அறத்தினையும் பயக்கும், பொருளால் பிறர்க்கு நன்மையினைக் கொடுத்த இனிமைப் பண்பின் நீங்காத சொல் என்று விளக்கிய பரிமேலழகர், நீதியாவது - உலக்தொடு பொருந்துதல் என்று அச்சொல்லிற்குச் சிறப்புரையும் வரைந்துள்ளார். நயன் எனும் சொல் "நீதி" என்ற பொருளில் அறத்திணை உணர்த்துவதாகவே அமைகின்றதெனலாம். (முருகன், இராசு, ச.,2011)

**ஒப்புமைக் கருத்துக்கள் (அற நீதிக் கோட்பாடுகள் சார்ந்தவை)**

மனித சமூகங்கள் தனித்து வாழ்கின்ற கூட்டமல்ல. அவ்வாறு வாழவும் அவர்களால் முடியாது. இதனால் சார்ந்து வாழ்கின்ற கூட்டத்தவர்களாக அவர்கள் படைக்கப்பட்டுள்ளனர். இவ்வாறு கூடிவாழுகின்ற மக்கள் கூட்டத்தவர்களது நடவடிக்கைகள், செயற்பாடுகள் எவ்வாறு அமைதல் வேண்டுமென்பதனை இஸ்லாமிய மதமும் அவ்வாறே தமது குடும்பத்தவர்களிடமும் உறவுகளிடமும் அயலவர்களிடமும் சமூகத்தவரிடமும் எப்படி நடந்துகொள்ள வேண்டுமென்பதனை இலக்கியங்களும் பிற மதங்களும் கூறுகின்றன. அவ்வகையில் மேற்கூறப்பட்ட விடயங்களாக திருக்குறளின் பெருமைகளை திருவள்ளுவர் வாயிலாகவும், திருக்குர்ஆனின. பெருமைகளின் நபிகளின் மூலமாகவும் உலகிற்கு உணர்த்தப்பட்டுள்ளன.

சமூகத்துடன் இணைந்து வாழுகின்ற இயல்பினை உடைய மனிதன் தனக்கு விருப்பமானதொரு மதத்தினைப் பின்பற்ற முற்படுகின்றபோது அவன் பின்பற்றக்கூடிய செயல்கள் அனைத்தும் எவ்வாறு இருக்க வேண்டும் என்பதனையும், அவற்றினை அவன் எவ்வாறு நிறைவேற்ற வேண்டும் என்பதனையும் மதங்கள் வலியுறுத்துகின்றன. அதுபோன்றே நீதி நூலான திருக்குறளும் மனிதனொருவன் தனது வாழ்க்கையில் செய்ய வேண்டிய செயல்களையும் கடமைகளையும் வலியுறுத்துகின்றது. பொதுப்படப் பார்க்குமிடத்து மனிதனது செயல்களும் கடமைகளுமான இல்வாழ்க்கை, அன்புடமை, வாழ்க்கைத்துணைநலம், விருந்தோம்பல், செய்நன்றியறிதல், இன்சொல் கூறுதல், நடுவுநிலமை, ஒழுக்கம், பொறையுடமை, பிறனில் விழையாமை, ஈகை, புகழ் போன்ற ஒப்பற்ற பல கருத்துக்கள் திருக்குர்ஆனிலும் திருக்குறள் போன்றே காணப்படுகின்றன. திருக்குர்ஆன் 114 அத்தியாயங்களில் தந்துள்ள கருத்துக்கள் திருக்குறளில் 133 அதிகாரங்களில் விளக்கப்பட்டுள்ளன. இவ்விரு படைப்புக்களிலும்

காணப்படுகின்ற கருத்துக்கள் எல்லாமே எக்காலத்திற்கும் பொருத்தமுடையவனாகக் காணப்படுகின்றன.(பரந்தாமன்,பெ.,2014)

**திருக்குறள் - திருக்குர்ஆன்**

பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னரான காலப்பகுதியில் வாழ்ந்த தமிழ்ப் புலவர்கள் தொடர்பான தகவல்கள் தெளிவற்ற தகவல்களாகவே உள்ளன. அவ்வாறே திருவள்ளவர் வாழ்ந்த காலந் தொடர்பாகவும் அறிஞர்களிடையிலே கருத்து முரண்பாடுகள் காணப்படுகின்றன. எனவே தற்காலம் வரை இவர் வாழ்ந்த காலந் தொடர்பாகச் சர்ச்சைகள் இருந்து வருகின்றன என்பதே உண்மை. எது எவ்வாறாயினும் சங்ககால இலக்கிய நூல்களிலொன்றாகக் கருதப்படுகின்ற திருக்குறளினை மூலமாக உலகமே வியக்கின்ற வண்ணம் இரண்டு அடிகளில் சீரிய பல கருத்துக்களைத் தந்த பெருமை திருவள்ளுவருக்குரியதே. எவ்விடத்தில் சென்று இதில் சொல்லப்பட்ட கருத்துக்களை எடுத்துக் கூறினாலும் அதில் சொல்லப்பட்ட கருத்துக்கள் எல்லாமே அனைவருக்கும் பொருத்தமுடையதாகவே அமைவதனை அவதானிக்கலாம். அறம், பொருள், இன்பம் போன்ற முப்பாலின் வாயிலாக உலகினையே திரும்பிப் பார்க்க வைத்த பெருமை இதற்கு உண்டு.

மனித மேம்பாட்டிற்கான வழிவகைகளை எடுத்துக்கூறுகின்ற மற்றுமொரு படைப்புத்தான் திருக்குர்ஆன். வானவர் ஜிப்ரில் அலைஹிஸ்ஸலாம் அவர்களின் மூலமாக நபி அவர்களுக்கு அருளிய இந்த நன்மறையே திருக்குர்ஆன் எனப்படுகின்றது. இந்த அரபுச் சொல்லுக்கு ஓதப்பட்டது, ஓதக்கூடியது, ஓதவேண்டியது போன்ற பல பெயர்கள் காணப்படுகின்றது. இத்தகைய நன்மறையானது நபி அவர்கள் தனது 40ஆவது வயதில் ரமளான் மாதத்தின் பிந்திய இரவுகளில் ஓரிரவன்று மெக்கா நகருக்கு அண்மையிலுள்ள ஹிராக் குகையில் தனிமையில் இருந்து இறைவனைச் சிந்தித்த சமயத்தில்தான் முதன் முதலாக இது அருளப்பட்டதென்பது குறிப்பிடத்தக்கது. அவ்வகையில் இது 3 வசனங்கள் முதல் 286 வசனங்கள் வரையுமுள்ள சிறிய, பெரிய 114 அத்தியாயங்களாக அமைக்கப்பட்டுள்ளது.

**அன்பு காட்டல்**

அன்பு என்பது மனிதர்களுக்கு மட்டுமே உரியதல்ல. அது விலங்குகள், பறவைகள் என்பனவற்றுக்கும் காணப்படுகின்ற பொதுவான பண்பாகும். இதனைச் சீத்தலைச் சாத்தனார் பின்வருமாறு கூறுகின்றார்,

தாயில் தூவாது குழவிதுயர் கேட்போர்
ஆவந்து அணைத்தாங்கு அதன்துயர் தீர
நாவால் நக்கி நன்பால் ஊட்டிப்
போகாது ஏழுநாட் புறங்காத்த ஓம்ப

என்ற பாடலின் வரிகள் மூலமாக தாயற்ற ஒரு குழந்தைக்கு பசுவொன்று பால் ஊட்டி அன்பு காட்டியதனை எடுத்தியம்பியுள்ளார். இதேபோன்று திருவள்ளுவரும் தனது 133 அதிகாரங்களுள் ஒன்றான **அன்புடமை** என்ற அதிகாரத்தில் மனிதனுக்கு இன்றியமையாத பண்பான அன்பினை எடுத்துக்காட்டுகின்றார். அதில் மனிதனானவன் தனது உறவினரோடு மட்டுமன்றி அவன் எல்லோரிடமும் காட்டுகின்ற அன்பே உண்மையான அன்பு எனக் கூறுகின்றார். தன்னைப் போன்று பிறரினையும் நேசிக்கின்ற அன்புள்ளம் கொண்டவன் தனது உடல் உறுப்புக்கள் ஒவ்வொன்றிலும் அதனைத் தானம் செய்கின்ற அளவிற்கு அன்பு கொண்டவனாக காணப்படுவான் என்பதனைத் திருவள்ளுவர் பின்வருமாறு கூறுகின்றார்.

“ அன்பிலார் எல்லாந் தமக்குரியர் அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு“ (குறள் : 72)

கணவனும் மனைவியும் இல்லற வாழ்க்கையில் ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுப்பினை மேற்கொண்டு வாழ்கின்றபோது இல்லற வாழ்வு சிறப்பானதாக அமைவதாகத் திருவள்ளுவர் கூறுகின்றார். இதனை இவர் ஒத்த அன்புடையோர் உறவு கலத்தல் எனக் கூறுகின்றார். அது பின்வருமாறு அமைகின்றது.

அறனெனப்பட்டதே இல்வாழ்க்கை அ∴தும்
பிறன்பழிப்பது இல்லாயின் நன்று“ (குறள் : 49)

இல்லறத்தினை முன்னின்று நடாத்துகின்ற இல்லாளோடு கூடிவாழ்தல் என்ற இயல்பின்மூலமாக இல்வாழ்க்கைக்குப்பரிமெலழகரும் விளக்கம் கொடுக்கின்றார்.கணவன் மற்றும் மனைவி என்பவர்கள் அறச்செயல்களை மேற்கொள்ளுவதற்கும் சமூகத்திற்கும் சிறந்த உதாரணமாகக் குடும்பம் என்ற அமைப்பானது முன்மாதிரியாகத் திகழ்கின்றது.

மனிதன் என்பவன் கறுகிய வட்டமான குடும்பத்தில் மட்டும் தனது அன்பினைச் செலுத்தாமல் சமூகத்திலுள்ள அனைத்து மனிதர்களிடமும் அன்பு செலுத்த வேண்டுமென்பதனைனக் திருக்குர்ரானில்

“ அல்லாஹ் மிக்க கிருபை உடையவன்
மிக்க அன்புடையவன் ஆகவும் இருக்கின்றான்“(திரு.ஆன்: 11:90)

எனக் குறிபிடப்படுகின்றது.

**இல்வாழ்க்கை**

நல்லறம் செய்ய வேண்டும் என்று விரும்புகின்ற இல்வாழ்வான் கட்டாயம் ஒரு பெண்ணை மணந்து இல்லற வாழ்க்கையினை இனிதே மேற்கொள்ள வேண்டும். உலக வளர்ச்சி மட்டுமன்றி மிகமுக்கியமான அன்பு வளர்ச்சியும்கூட இல்வாழ்க்கையினது சிறப்பிலேதான் அமைந்து காணப்படுகின்றது. எனவேதான் **இல்வாழ்க்கை** என்ற அதிகாரத்தினையே திருவள்ளுவர் வகுத்திருந்தார். இல்லற நெறியினைக் காத்துச் செம்மையான வழியில் வாழ்பவன் என்று பெருமையுடன் போற்றப்படுபவன் ஏழை, தக்கோர், உறவினர் ஆகிய மூவரும் அவர்கள் செல்கின்ற உயர்ந்த நல்லொழுக்க நெறிகளில் துணையாக நிற்பான் என்ற பொருள்பட கீழ் வருமாறு வள்ளுவர் கூறுகின்றார்.

" இல்வாழ்வான் என்பவன் இயல்புடைய மூவர்க்கும்
நல்ஆற்றின் நின்ற துணை" (குறள் : 41)

அனைவரிடத்திலும் அன்புடன் வாழ்வதென்பது இன்றியமையாதது ஆகும். அன்பு மட்டுமன்றி இந்த அன்பின் அடிப்படையில் நிற்கின்ற அறமும் ஒருவரிடம் சிறப்பாக அமையுமானால் அத்தகைய இல்லற வாழ்வானது சிறப்பாக அமையுமெனலாம். அதுமட்டுமன்றிப் பண்பாடு உள்ளதாகவும் அது அமையும்.

குடும்பம் எனப்படுகின்ற அமைப்புத்தான் சமூகம் என்ற அமைப்பு ஏற்படுவதற்கான அடித்தளமாக அமைகின்றது. திருமணத்தினைப் பற்றி இஸ்லாமிய மார்க்கம் கூறுகின்றபோது அது அது மனித இனத்திற்கு இறைவன் வழங்கிய கொடை எனக் கூறுகின்றது. இல்லறத்தின் ஊடாக குடும்பம் என்ற அமைப்பிற்குள் வாழுகின்ற கணவனும் மனைவியும் ஒருவருக்கொருவர் தமது கற்பினையும் மானத்தினையும் பாதுகாத்துக் கொள்ளுகின்ற ஆடையினைப் போன்று இருக்க வேண்டும் என்பதனைப் பின்வருமாறு திருக்குர்ஆன் குறிப்பிடுகின்றது

" அவர்கள் உங்களுக்கு ஆடையாகவும்
நீங்கள் அவர்களுக்கு ஆடையாகவும் இருக்கின்றீர்கள் "(திரு.ஆன்: 2:188)

**இன்சொல் கூறுதல்**

**இனியவை கூறல்** என்ற அதிகாரத்தில் பிறர்க்குத் துன்பம் தராத இனிய சொல் இம்மை மறுமை பயனைத் தரும் (குறள் : 98) என்றும், இனிய சொற்களை விடுத்து, கடுஞ் சொற்களைப் பேசுதல் கனியிருக்கக் காய் உண்பது போன்றது (குறள் : 100) என்றும் கூறியுள்ளார். மேற்கூறப்பட்ட விடயங்கள் இரண்டுக்கும் ஆதாரமாக அமைந்த குறள்கள் இரண்டும் வருமாறு

சிறுமையுவு நீங்கிய இன்சொல் மறுமையும்
இம்மையும் இன்பம் தரும் (குறள் : 98)

இனிய உளவாக இன்னாத கூறல்
கனிஇருப்பக் காய் கவர்ந்தற்று (குறள் : 100)

உலகில் வாழுகின்ற மக்கள் தங்களது சுற்றத்தாரிடம் மட்டுமன்றி ஏனையோரிடமும் முகத்தில் விருப்பமும் அன்பும் தோன்றுமாறு இனிமையாகப் பேசுவதென்பது அவசியமானதாகும். இஸ்லாமிய மார்க்கத்தினைப் பின்பற்றுகின்றவர்கள் மென்மையாக உரையாடுபவர்களாகவும் நற்குணம் உடையவர்களாகவும் காணப்படுவர். இத்தகைய இயல்பகள் உடையவர்களை வேகத்தில்,

“கனிவான இனிய சொற்களும் குற்றத்தை
மன்னித்தலும் தர்மம் செய்தலைவிட மேலானது ஆகும்“ (திரு.ஆன் : 2 : 263)

என இஸ்லாமியமதமானது உணர்த்துகின்றது. அவ்வாறே பெரியவர்களிடம் நாம் எப்படி நடந்துகொள்ளுதல் வேண்டுமென்பதனை

“ பெற்றோர்கள் முதுமையில் உம்மிடம் வந்து சேர்வார்கள்
அப்போது அவர்களுடன் இனிமையாகப் பேசு.
சீ என்று விரட்டாதே அவ்விருவரிடமும்
கனிவான கண்ணியமான பேச்சக்களைப் பேசுவாயாக“(திரு.ஆன் : 17 : 23)

என்றவாறு திருக்குர்ஆன் குறிப்பிடுகின்றது. திருவள்ளுவரும் தனது குறளின் மூலமாகப் பல இடங்களில் இனிமையாகப் பேச வேண்டியதன் அவசியத்தினையும் இன்முகத்தினாலும் சொல்லினாலும் மற்றவர்கள் புண்படாதவாறு நடந்தகொள்ள வேண்டுமெனவும் கூறுகின்றார். வஞ்சனையற்ற சொல்லும் கருணைமிக்க சொல்லும் இதலைவிட நல்ல பயனைத் தருவதாகவும் பின்வரும் குறளின் மூலமாகத் தெரிவிக்கின்றார்.

“ சிறுமையுள் நீங்கிய இன்சொல் மறுமையும்
இன்மையும் இன்பந் தரும்“ (குறள் : 98)

இதன் மூலமாகப் பிறருக்குத் துன்பம் தராத சொல்லும் இனிய சொல்லும் ஒருவனுக்கு இம்மையிலும் மறுமையிலும் இன்பந் தருவதனை அறிய முடிகின்றது. திருவள்ளவரது இக்கருத்தினையொட்டியே சங்ககாலப் புறநானூற்றப் பாடல் ஒன்றும் இடம்பெற்றுள்ளதனை பின்வருமாறு அறியலாம்

“ நிலம்புடை பெயர்வது ஆயினும் ஒருவன்
செய்தி கொன்றோர்க்கு உய்தி இல்லென
அறம் பாடிற்றே ஆயிழை கணவ (புறம்: 34)

**செய்ந்நன்றியறிதல்**

நன்றி கூறக்கூடிய பண்பானது தற்கால சமுதாயத்தில் அருகி வருகின்றது. நன்றியொடு இருக்க வேண்டும் என்ற பண்பாட்டினைத் திருவள்ளுவர் **செய்ந்நன்றி அறிதல்** என்ற அதிகாரத்தில் எடுத்துக்காட்டியுள்ளார். மனிதனொருவனுக்கு இருக்க வேண்டிய பண்புகளில் தலைசிறந்த பண்பாகவும் பிறரால் மதிக்கக்கூடிய பண்பாகவும் இருப்பது நன்றி கூறக்கூடிய பண்பாகும். நாம் ஒருவர் செய்கின்ற செயலுக்கு நன்றியினைத் தெரிவிக்காதுவிட்டாலும்கூட அத்தகைய நன்றியினை மறத்தல் கூடாது. எந்த அறத்தினை அழித்தாலும் அதிலிருந்து தப்பித்துக்கொள்ள முடியும். ஆனால் ஒருவர் செய்த நன்றியினை மறந்தவனுக்கு உய்வில்லை என்பதனைப் பின்வரும் குறள் வாயிலாக வெளிப்படுத்துகின்றார்.

“எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு“ (குறள் : 110)

மேற்கூறப்பட்ட விடயமாகத் திருவள்ளுவரது மற்றொரு குறள் பின்வருமாறு தனது கருத்தினை முன்வைக்கின்றது.

“ நன்றியை மறத்தல் கூடாது : தீமையை அப்பொழுதே
மறக்க வேண்டும்“ (குறள் : 108)

தனக்கு எந்த உதவியும் செய்யாத ஒருவருக்குச் செய்த உதவிக்கு இந்த உலகமும் வானகமும் ஈடாகாது. உதவி சிறியதாக இருப்பினும் தக்க காலத்தில் செய்யப் பெறுமாயின் அது இவ்வுலகைவிட உயர்ந்ததாகும். பயன் எதனையும் கருதாமல் செய்கின்ற உதவிக்கு ஏழு கடல் நிகரன்று. தினையளவு நன்றி செய்தாராயினும் அதனைப் பனை அளவாகக் கருதுவது நன்று. எதனையும் யோசியாது செய்த நன்றியினை நினைத்திருப்பதே நன்று. எனவே நன்றி மறப்பதென்பது நன்றல்ல என்ற தழிரது நன்றி மறவாப் பண்பினை அறத்துப்பாலில் அழகாக எடுத்துரைக்கின்றார். வள்ளுவர்.

இஸ்லாத்திலும் நன்றி மறவாமை பற்றிய கருத்துக்கள் சிறப்பிடம் பெற்றுள்ளன. இவ்வுலகில் வாழுகின்ற மனிதர்கள் ஒவ்வொருவரும் ஒருவருக்கொருவர் உதவி செய்து வாழுதல் வேண்டும். உதவி செய்தவர்களை மறக்காமல் அவர் செய்த உதவியினைப் போற்றுவது கடமையாகும். இஸ்லாமிய சமயத்தில் இத்தகைய நேர்மையான பண்பு எனப்படுவது உபகாரத்தினை ஏற்றுப் பிரதியுபகாரம் செய்வதாகும். இதனை நபி அவர்கள் பின்வருமாறு கூறுகின்றார்

“ எவரேனும் அல்லாஹ்ாவின் பெயரால் உங்களிடம் பாதுகாப்பினைக்
கோரினால் அவருக்க நீங்கள் பாதுகாப்பினை வழங்குங்கள் “

" உங்களுக்கு எவரேனும் உபகாரம் செய்தால் அதற்குப் பிரதியுபகாரம் செய்யுங்கள்". உபகாரத்திற்கு நன்றி செலுத்துவதென்பது முஸ்லிம்களுக்குக் கடனைப் போன்றதாகும். இத்தகைய நன்றியினைச் செலுத்துகின்ற பண்பினை அல்லாஹ் நன்றியுடையோருக்கு அதி சீக்கிரம் நற் கூலியினை வழங்குவான்(திரு.ஆன் : 3: 144)

திருக்குர்ஆன் கூறுவது போன்று உபகாரத்தினைப் பெற்றவர் அந்த உபகாரத்தினைப் பாதுகாத்து மதித்து அழகிய முறையில் அங்கீகரிக்க வேண்டும் என்ற நடைமுறையினை ஒருவரிடத்தில் அது ஏற்படுத்துகின்றது. இதனையே திருக்குறளும் இவ்வுலகத்தில் உள்ள நல்ல செயல்களை அழித்துத் தீமை செய்தவனுக்கு அத்தீமையினின்று தப்பிப் பிழைக்க வழியுண்டு. ஒருவர் செய்த உதவியினை மறந்து தீமையினை இழைக்கின்ற பாவத்திலிருந்தும் தப்பிக்க வழியில்லை. உலகில் பாவங்களைச் செய்தவனுக்குப் பிராயச்சித்தம் உண்டு. ஆனால் நன்றியினை மறந்தவர்களுக்கு உலகிலிருந்து உய்வதற்கு வழியில்லை என்பதனை வள்ளுவர் வெளிக்காட்டியிருந்த முறையினை ஏற்கனவே கற்றிருந்தோம். உதவி செய்து வாழுகின்ற பண்புதான் உலகில் உயர்ந்ததென்பதனை கரானும் குறளும் வலியறுத்துகின்றன. இவ்விரு உலகப் பொதுமறைகளும் வாழ்வின் அடிப்படிக்கு முக்கியமான காரணியான அறத்தினையும் நீதியினையும் வலியுறுத்துகின்றன. அறமானது மனித வாழ்வினை மேம்பாடடையச் செய்கின்றது. அத்தகைய அறத்தினைப் பின்பற்றுவதற்கான வழிவகைகளை இவை இரண்டும் வெளிக்காட்டுகின்றன.

**முடிவுரை**

உலகில் பிறந்த மனிதர்கள் ஒவ்வொருவரும் மனிதனும் தனது வாழ்வில் கடைப்பிடிக்க வேண்டிய நெறிமுறைகளாகத் திருக்குறளும் திருக்குர்ஆனும் எடுத்துக்கூறுகின்றன. பல அற நிதிக்கருத்துக்களைக் கொண்டுள்ள இவை பிறப்பில் ஏற்றத்தாழ்வு காணாத சமநிலைப் பார்வையினை உடையன. இதனது கருத்துக்கள் அக்காலத்திற்கு மட்டுமன்றி எக்காலத்திற்கும் பொருந்துவதாகக் காணப்படுகின்றமை இவற்றினது சிறப்புக்கு சிறந்த எடுத்துக்காட்டுக்களாக உள்ளன. அவ்வகையில் அன்புடமை, இல்வாழ்க்கை, இன்சொல் கூறுதுல், செய்ந்நன்றியறிதல் போன்ற இன்னும் பல அம்சங்களில் இவ்விரண்டும் ஒத்த சிந்தனைகளை மக்களது மேம்பாட்டின் பொருட்டு முன்வைப்பதனை அவதானிக்கலாம். இவர்கள் தருகின்ற கருத்துக்கள் சீரிய முறையில் பின்பற்றப்படுமாயின் உலகில் நல்ல பண்பாட்டினை உடைய சமுதாயத்தினை உருவாக்க முடியும் எனலாம்.

**உசாத்துணை நூல்கள்**


கந்தாசாமி, செ., (1959), *திருக்குறள் உரைக்கொத்து,* திருக்குறள் பதிப்பு நிதி வெளியீடு, திருச்சிராப்பள்ளி.

கலாதேவி.ச., (2011), *வள்ளுவர் காட்டும் பண்பாட்டுப் பதிவுகள்.* தமிழ் ஐயா வெளியீட்டகம், திருவையாறு

பரந்தாமன்,பெ., (2014), *திருக்குறள்,* தமிழ் ஐயா வெளியீட்டகம், திருவையாறு.

முருகன், இரா.சு., (2011), *திருவள்ளுவர் காத்த நீதியும் அறமும்,* தமிழ் ஐயா வெளியீட்டகம், திருவையாறு.
ஹாபிஸ். நு.ஆ அப்துல் ரஹமான்., (1975), *அன்வாறுல் குர்ஆன்*, தென்காசி.